Chandikuli Branch Library

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | வைகாசி 18 | ரம்ழா 10 | இதழ் 110
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 31-5-1985

## இனப் பிரச்னை: ஜனாதிபதி யோசனை
### பலராலும் அங்கீகாரம் பெற்றிருக்கவேண்டும்
### 'அமிர்' கருத்து

(சென்னை)

''இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இலங்கைத்தமிழர்கள் தொடர்பாகமுன்வைக்கவுள்ளதீர்வுகள் இலங்கை அமைச்சரவையினுலும், எதிர்க்கட்சிகளினுலும் மற்றும் பொது ஸ்தாபனங்களினுலும், அங்கீகரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்'' என்று தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி இந்தியப்பிரதமருடன் நாளை மறுதினம் நடத்தவுள்ள பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே திரு. அமிர்தலிங்கம் மேற்படி தெரிவித்தார்.

## 'இவர்களும்' இடமாற்றம் கோருகின்றனராம்!

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர்கள் பலர் இப்பொழுது கடமையாற்றும் இடங்களிலிருந்து

[8-ம் பக்கம் பார்க்க]

# ஜே. ஆர்.-ரஜீவ் உச்சி மகாநாடு

# ஞாயிறு நடக்கும்

## ஜனாதிபதி நாளை புறப்பாடு; திங்கள் தாயகம் திரும்புவார்

[நமது அரசியல் நிருபர்]

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்திக்குமிடையிலான உச்சிமகாநாடு ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட திகதியிலும் பார்க்க ஒரு நாள் முன்னதாகவே - ஒருநாள் சந்திப்பாக - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இச் சந்திப்பின்போது; வடபகுதி தீவிரவாதிகள் வன்செயலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று இந்தியாவை இலங்கை வலியுறுத்தும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## ✶ 'ஸ்கொட்ஸ்மன்' ஏடு கண்டனம்: பிரிட்டனில்கூட இலங்கை தமிழருக்கு பாதுகாப்பற்ற நிலை!

(லண்டன்)

''1947-ம் ஆண்டு இலங்கைக்குப் பிரிட்டன் வழங்கிய சுதந்திரத்தில் அங்குள்ள தமிழர்களுக்குப் போதியளவு பாதுகாப்புக் கிடைக்கவில்லை. இதனுலேயே அவர்கள் தற்போது பிரிட்டனில் பாதுகாப்புத்தேடி அரசியல் தஞ்சம் புகுந்துள்ளனர்.'' என்று 'ஸ்கொட்ஸ்மன்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை பிரித்தானிய அரசைச் சாடியுள்ளது.

ஸ்கொட்லாந்தின் 'எடின்பரோ' நகரிலிருந்து இப்பத்தி

(8-ம் பக்கம் பார்க்க)

## ✶ யாழ். பொதுசன நூலகம்: வண்ணார்பண்ணையில் 3வது கிளை திறக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் மூன்றுவது கிளையை வண்ணார்பண்ணையிலுள்ள தட்டாதெருச்சந்தி கலாஜோதி சனசமூக நிலையத்திற்கருகில், யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சி. வீ கே. சிவஞானம் நேற்றுக்காலை திறந்து வைத்தார்.

வண. பிதா பிரான்சிஸ் யோசப் அடிகளார், முன்னுள் மாநகரசபை உறுப்பினர் திரு. எஸ் தியாகராசா ஆகியோர்

(8ம் பக்கம் பார்க்க)

## வீதி திருத்தம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் வீதி திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[8ம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சி வங்கி கொள்ளை வழக்கு 'உமாமகேஸ்வரன் கைதுசெய்யப்படமுடியாதவர்' -அரச சட்டத்தரணி

(கொழும்பு)

கிளிநொச்சி வங்கிக் கொள்ளைச் சந்தேக நபரான உமாமகேஸ்வரன் கைது செய்யப்பட முடியாதவராக உள்ளார்'' என்று அரச சட்டத்தரணி சி ஆர். டி. சில்வா தெரிவித்தார்.

கிளிநொச்சி மக்கள்வங்கியில் 1981-ம் ஆண்டு இடம்பெற்ற கொள்ளை தொடர்பாக உமாமகேஸ்வரன் மீதும், அவரது சகாக்கள் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போதே அரச சட்டத்தரணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச சட்டத்தரணி சில்வா மேலும் தெரிவித்ததாவது: ''உமாமகேஸ்வரன் தவிர்ந்த

[8-ம் பக்கம் பார்க்க]

## தொழிலதிபர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடத்திச் செல்லப்பட்ட தொழிலதிபர் திரு. எஸ். இராசரத்தினம் நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் புன்னாலைக்கட்டுவனிலுள்ள அவரது இல்லத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

## அரிசி, சீனி கப்பல்கள்

[சுண்டுக்குளி]

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு நாளை மறுதினம் 1,900 தொன் அரிசியுடன் இரு கப்பல்களும். 950 தொன் சீனியுடன் மற்றுமொரு கப்பலும் வரவிருக்கின்றன.

## தொடர்ந்து கல்வீச்சு; சாரதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே சேவையிலீடுபடும் வாகனங்கள் தொடர்ந்து பல இன்னல்களுக்குள்ளாகிவருகின்றன.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று வந்த பிரயாணிகள் பஸ்கள் அநுராதபுரத்துக் கண்மையில் பலத்த கல்வீச்சுக்கு இலக்கானதால் கண்ணுடிகள் சேதமடைந்தன.

சாரதி படுகாயம்

ஒருபஸ்சாரதியை நோக்கி

[8ம் பக்கம் பார்க்க]

## 15 நாள் சிறைத் தண்டனையின்பின் கலைஞர் விடுதலை

(சென்னை)

தி. மு க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி பதினைந்துநாள் சிறைத்தண்டனைக்குப் பின்னர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இலங்கைத் தமிழர் விஷயத்தில் மத்திய அரசு துரிதமாகச் செயல்படவில்லை என்று கண்டித்து, அரசின் தடைஉத்தரவை மீறி காஞ்சிபுரத்தில் அரசு அலுவலகம் முன்பாக மறியல் போராட்டம் நடத்த முயன்றபோது கடந்த 16-ம் திகதி கலைஞர் கைது செய்யப்பட்டார், பின்னர் இவர் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு மாஜிஸ்ரேட்டு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு பதினைந்து நாட்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

## அரியாலையில் நேற்று

[யாழ்ப்பாணம்]

அரியாலை நெடுங்குளம் சந்திக்கண்மையில் உள்ள ஒருவீடு நேற்று மாலை குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வீட்டைச் சோதனையிடச் சென்றவர்களே குண்டுகள் வைத்துத் தகர்த்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி

[8ம் பக்கம் பார்க்க]

## ஓர் வேண்டுகோள்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் கடந்த சில தினங்களாக நடந்துவரும் கொள்ளைகளால் பாதிக்கப்படுபவர்கள் எமது ஊழியர்கள் என்ற காரணத்தால் மேற்படி கொள்ளைகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஓர் மனிதாபிமான வேண்டுகோள் விடுக்கிறேம்.

வடபகுதியில் சிறப்பாக இயங்கி வரும் எமது தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறுர்கள். அடிக்கடி நிகழும் இப்படியான கொள்ளைகளால் நிர்வாகம் எமது தொழிற்சாலையை மூடும்படி உத்தரவிட்டால் பாதிக்கப்படுபவர்கள் தொழிலாளர்கள் மட்டுமல்ல சீமெந்து கைத்தொழிலை நம்பியிருக்கும் பல்லாபிரக்கணக்காணேரும் ஆவார்.

கடந்தவாரம் எமது தொழிற்சாலைஊழியர்கள் வதியும் வீடுகளுக்கு தண்ணீர் கொடுத்துக்கொண்டிருந்த ஓர் உழவு இயந்திரம் இல:36/4084 ஓர் சிலரால் சாரதியை அடித்து துன்புறுத்தி அபகரிக்கப்பட்டது. இவ்வாரம் தொழிற்சாலையில் ஓர் பகுதியில் இருந்து வேறொரு பகுதிக்கு சென்றுகொண்டிருந்த ஓர் உழவு இயந்திரம் இல: 36,6603 பெட்டியுடன் துப்பாக்கி முனையில் அபகரிக்கப்பட்டது.

இவைகள் எல்லாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏன்? விடுதலை விரும்பிகள் இவைகளைக் கண்டும் பாராமுகமாக இருப்பது ஏன்? இவைகளை சமூக விரோதச் செயலாகக் கருதவில்லையா? எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு கடந்த சில மாதங்கக்கு முன் அபகரிக்கப்பட்ட உழவு இயந்திரம் இல; 36/6605 உட்பட அனைத்தையும் மீண்டும் எம்மிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேம்.

மீண்டும் இப்படியான செயல்கள் இடம்பெறுமானுல், பல்லாயிரக்கணக்கன ஊழியர்கள் அல்லலுறும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் நிலை எமது சகோதரர்களுக்கும் ஏற்படலாமென நாமும் அஞ்சுகின்றேம்,

ஊழியர் பேரவை,
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை

(3548)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை 2-ம் குறுக்குத்தெருவில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. சுப்பிரமணியம், 2 ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. 3539

தட்டாதெரு சந்தியில் இருந்து 300 யார் தூரத்தில் சகல வசதியும் உள்ள புதிய வீடு விற்பனைக்கு, நியூஆனந்த பவான் தேனீர்க்கடை, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். 3500

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் (பழைய C T B. டிப்போவுக்கு அருகாமையில்) 6 பரப்புக் காணி, வீடும், நல்ல தண்ணீர் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு:- பொ சிவபாலன், சட்டத்தரணி, சித்தன்கேணி 3446

நீரழிவு வியாதிகளுக்கு உகந்த ''கோதுமை அரிசி'' மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M G M and Stores, 777, காங்கேசன்துறை வீதி and 208, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. (2820)

சுதுமலை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் 1½ பரப்பு காணியும், வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி S. சின்னப்பு, சுதுமலை மேற்கு, மானிப்பாய். 3531

கட்டைப்பிராயில், பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியிலிருந்து 50 யார் தொலைவில் கலைமணி லேனில் நல்லதண்ணீர், மின்சாரம், மற்றும் சகல வசதியும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி அழகம்மா தில்லைநாதன். கலைமணி லேன், கட்டைப்பிராய், யாழ்ப்பாணம். 3520

புங்குடுதீவு பெருங்காடு கந்தசாமி கோவிலுக்கு அணித்தாக, குறிகாட்டுவான் வீதிக் கரையில் முன்புறமதிலுடன் நன்னீர்க்கிணறு, பனைகள், தென்னைகளடங்கிய பதின் மூன்று பரப்புக்காணியும், இருபிட்டி கூத்தன் வயலில் வீதிக்கு அணித்தாக நன்னீர்க் கிணற்றுடன் பத்துப்பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. ஏரம்பு, ஓய்வு பெற்ற ஆசிரியர், முதலாம் வட்டாரம், புங்குடுதீவு. 3504

யாழ் பகுதி ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜத்திற்கு கணக்கு

### இலிகிதர் தேவை

தகமைகள் - 21 வயதிற்கு மேற்பட்டவராகவும் ஆகக் குறைந்தது க. பொ. த. சாதாரண தரத்தில் கணிதத்தில் திறமை சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கணக்கியலில் அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்கள்:- 30-6-85 ற்கு முன்னதாக பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தலைவர்
யாழ் பகுதி ஐ நா. சங்கங்களின் சமாஜம்,
இல:109, மூன்றாம் குறுக்குத் தெரு,
தபால் பெட்டி இல;50,
யாழ்ப்பாணம்.
3533

## வகுப்பு

I. C. M. A. செக்ஷன் A நவம்பர் 1985 பரீட்சைகுரிய போதனா வகுப்புகள் ஆரம்பம் 1- 6- 1985 சனி, ஞாயிறு, போயாதினங்கள் முற்பகலில் மட்டும் வகுப்புக்கள், தனிப்பட்ட கவனம். வன்னியசிங்கம் M. Sc [Econ] [Lond] B. Com [Lond] வைரவர் கடாட்சம், பலாலி வீதி, திருநெல்வேலி, A. G. A காரியாலயத்திற்கருகே. 3503

## WANTED

Wanted an Assistant immediately M. B.B. S. or R.M. P.- Retd.-able to take charge-Central Clinic, Nelliady Karaveddy. (3540)

## வைத்தியம்

மூலவியாதிகள், பாரிச வாதம், முழங்கால் வாதம் போன்ற வாதரோகங்களுக்கும், பீனிசம், எக்ஸிமா, தொய்வு, நரம்புத் தளர்ச்சி, மாதவிடாய் கால உபத்திரவங்கள், குழந்தைகள் சம்பந்தமான வியாதிகளுக்கும் விசேடமான சித்த, ஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. மங்களாம்பிகை அம்பாள் D A.M., மங்களபதி வைத்தியசாலை, 41/5, சங்கிலியன் வீதி, நல்லூர். 3407

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் பிரதான வீதிகள் தவிர்ந்த சிறு தெருக்கள், ஒழுங்கைகளில் வியாபாரஞ் செய்பவர்கள் 'ஈழநாடு' பத்திரிகை விற்பனை செய்வதற்கு விரும்பினால் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
ஈழநாடு லிமிட்.

3508

## ICMA NEXT SESSION

பின்வரும் திகதிகளில்
ஆரம்பமாகின்றது

NOVEMBER—DECEMBER 1985

| | |
|---|---|
| I C M A - Section A [Week Ends] | 01-06-85 |
| Section B [Week Ends] | 01-06-85 |
| Professional Part I [Week Ends] | 01-06-85 |
| Chartered Preliminary [Week Ends] | 01-06-85 |
| I A A - Part I [Week Ends] | 01-06-85 |
| I A B - Foundation [Week Ends] | 01-06-85 |
| I A B - Intermediate [Week Ends] | 15-06-85 |
| I A B - Final [Week Ends] | 15-06-85 |
| I D P M - Part I [Week Ends] | 01-06-85 |

NOTE; Very special Rates for repeats.

### CANTABIA INSTITUTE,

21, MAIN STREET, JAFFNA.
T' PHONE: 24201

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

முன்னாள் அதிபர் அ. வ. பாலசுப்பிரமணியம் B.A. (Cey) L. T.
(தலவாக்கலை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை)



அன்னை மடியில்:
26- 08- 1929

ஆண்டவன் அடியில்:
31- 05- 1984

தந்தையின் பெருந்தகையே! பாசத்தின் நிறைகுடமே!
உந்தன் அயராத முயற்சியால் எம்மை ஆளாக்கி வைத்த உத்தமனே!
மனையாளும் பிள்ளைகளும் புதுமனையில் எதிர் பார்த்தோம். உந்தன் நல்வரவை-ஆனால்
வானொலியில் முழங்கியொலித்தது தந்தை அகாலமரணம்.
ஓராண்டு காலம் ஓடி மறைந்ததப்பா. ஓயவில்லை எங்கள் ஓல ஒலி.

மனைவி, பிள்ளைகள். உடுவில், சுன்னாகம். 3287

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

இளைப்பாறிய ஆசிரியை
திருமதி
உருக்குமணி
இராசரத்தினம்



மலர்வு: 15-06-1914
உதிர்வு: 02-05-1985

அவர்களின்

31-ம் நாள் நினைவஞ்சலி வேலணையில் 01- 06- 1985 சனிக்கிழமை காலை 6 மணி முதல் நிகழும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

–வைத்தியர் கி. இராசரத்தினம் J. P.,
மக்கள். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
''மலரகம்'', வேலணை-2. 3536

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னப்பு நடராசா
(ஓய்வு பெற்ற P. W. D ஓவசியர், மதுரங்குளி ஸ்ரீ முருகன் கோயில் தர்மகர்த்தா)



தோற்றம்:
21-02-1915

மறைவு:
12-05-1985

திதி:
31-05-1985

அன்பும் பாசமும் கொண்டு நல்வழிகாட்டி எம்மையெல்லாம் உயர்வுறச் செய்தும், பொதுச்சேவையிலும், தெய்வத் தொண்டிலும் நிலைத்த எங்கள் தலைவா!

உங்கள் ஆன்ம சாந்திக்காக எல்லாம் வல்ல ஸ்ரீ முருகப்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
சகோதரர்கள், நண்பர்கள்,

வட்டு-மேற்கு,
வட்டுக்கோட்டை.

3522

## பிரயாண சேவை

கொழும்பு — பேர்லின்
கொழும்பு — லண்டன்

விமானப் பயணங்கள்

- துரிதசேவை (வாராந்தம் இரு சேவைகள்)
- முற்பணம் அவசியமில்லை
- யாழ் — கொழும்பு — கட்டுநாயக்கா பிரயாண ஒழுங்குகள், கொழும்பில் கண்ணியமான தங்குமிடவசதி

மற்றும்
பாஸ்போட், விசா, பொண்ட் ஆகியவற்றிற்கும்

### லிப்ரஸ் லிமிட்டெட்

(R. G பில்டிங்)
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கொழும்பில்
LIBRAS LTD.
PAUL VI CENTRE,
24, FRONT STREET, COLOMBO 1.

ஐரோப்பியக்கிண்ண உதைபந்தாட்டம்—

# பிரஸல்ஸ் நகரில் 40 பேர் பலி

# 150 பேர் காயம்!

லண்டன், மே 30

பிரஸல்ஸ் நகரில் உதைபந்தாட்ட அரங்கொன்றின் மதில் சுவரொன்று இடிந்து வீழ்ந்ததில் 40 ரசிகர்கள் கொல்லப்பட்டனர். 150 பேர் காயமடைந்தனர்.

ஐரோப்பியக் கிண்ணத்துக்கான இறுதி ஆட்டத்தின் போதே பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸல்ஸில் இத்துயரச்சம்பவம் இடம்பெற்றது.

பிரிட்டன் உதைபந்தாட்ட அணியும், இத்தாலிய அணியும் இந்த இறுதி ஆட்டத்தில் பங்கு கொண்டன.

பிரிட்டன் அணியின் ஆதரவாளர்கள் போட்ட ஆர்ப்பாட்டத்தினாலேயே அம்மதில் சுவர் இடிந்து வீழ்ந்ததெனவும் இதனையடுத்தே அந்த அனர்த்தம் நிகழ்ந்ததெனக் கூறப்பட்டது.

பிரிட்டன் ஆதரவாளர்கள் பட்டாசு, போத்தல்கள் மற்றும் ஆபத்தான பொருட்களுடன் கலகம் செய்தனர். இக்கலகம் இடம்பெற்றபோது சுமார் 58 ஆயிரம் ரசிகர்கள் அந்த பிரஸல்ஸ் அரங்கில் குழுமியிருந்தனர்.

இறுதியாக இப்பந்தயத்தில் இத்தாலிய அணி 1—0 என்ற ரீதியில் பிரிட்டன் அணியைத் தோற்கடித்தது.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் தமது நாட்டின் ஆதரவாளர்கள் இப்பந்தயத்தில் நடந்துகொண்டவிதம் குறித்துக் கவலை தெரிவித்துள்ளார்.

பிரஸல்ஸில் இடம்பெற்ற இத்துரதிர்ஷ்டவசமான 40 உதைபந்தாட்ட ரசிகர்களின் மரணங்கள் கடந்த ஒருமாதகாலத்தில் ஐரோப்பிய நகரமொன்றில் இடம்பெற்ற இரண்டாவது விளையாட்டரங்கு அசம்பாவிதமாகும்.

முதலாவது சம்பவத்தில் கடந்தமாதம் பிரிட்டனில் விளையாட்டரங்கமொன்று தீப்பற்றியதில் 50 பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (கி)

## நேற்றுமுன்தினம் நடந்தது

[யாழ்ப்பாணம்]

யாழ். கோட்டைக்கு வெளியில் நேற்றுமுன்தினமும்துப்புரவு வேலைகள் நடைபெற்றன

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது புல்-புதர்-பற்றைகளை அகற்றி துப்புரவாக்குவதில் பலர் ஈடுபட்டிருந்தனர்.

பலத்தபாதுகாப்புக்கு மத்தியில் துப்புரவு வேலை நடைபெற்றது குறிப்பிடத் தக்கது. (மா)

## மீண்டும் பிஸ்கட் விநியோகம்

(உடுவில்)

யாழ்ப்பாணத்திலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இவ்வாரத்திலிருந்து மீண்டும் கெயர் பிஸ்கட் வழங்கப்படவிருக்கின்றது.

கடந்த டிசம்பர் மாதத்தின் பின்னர் யாழ்ப்பாணத்து பாடசாலைப் பிள்ளைகளுக்கு கெயர் பிஸ்கட் வழங்கப்படவில்லை. யாழ்ப்பாணக் கல்வி அதிபதி திரு. எம். சிமியாம்பிள்ளையின் முயற்சியின் பயனாகக் கெயர் பிஸ்கட்டுக்கள் இம்மாதத்தில் வந்துசேர்ந்துள்ளன.

அநேகமான பாடசாலைகளுக்கு இவ்வாரத்தில் பிஸ்கட்டுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாளை

## சென். ஜோன்ஸ் பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் சென். ஜோன்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமைகாலை நடைபெறவிருக்கிறது.

வண சாம் டி ஹோஷிங்டன் அடிகளார் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் என் சிறிதரன், திருமதி சிவ னி சிறிதரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள். (க)

## ஹாட்லிக் கல்லூரி வகுப்புகள்

(சரவெட்டி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 6ம், 7ம் வகுப்புக்கள் நேற்று வியாழன் முதல் புற்றளை மகாவித்தியாலயத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இக்கல்லூரியில் பிரஸ்தாப வகுப்புகளில் கல்விபயின்ற, கரவெட்டி, துன்னாலை, நவிண்டில், கரணவாய், உடுப்பிட்டி பகுதி மாணவர்களின் நன்மை கருதி இந்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கல்லூரிப் பிரமுகர் ஒருவர் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

இவ்வளவு நாட்களும் தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்வகுப்புகளுக்கு பாதுகாப்பு மற்றும்பல சிரமங்கள் காரணமாக இப்பகுதி மாணவர்கள் செல்லாது இருந்தனர்.

பருத்தித்துறையில்—

# வெளியேறிய வீடுகளில் திருட்டுக்கள் அதிகரிப்பு!

[யாழ்ப்பாணம்]

"அண்மைக்காலத்தில் பருத்தித்துறை நகரப்பகுதிகளில் அதிலும் கடற்கரைப் பகுதியை அண்மித்த பகுதிகளில் என்றுமில்லாத துன்பங்கள் நிகழ்ந்துவிட்டன. இதனால் பெரும்பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் வாழுகின்றார்கள். இந்தசந்தர்ப்பத்தைப் பயன்படுத்து சில சமூகவிரோத சக்திகள் இந்த வீடுகளில் களவாடுவதில் ஈடுபட்டு வருவதாக அறிகிறோம். பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலைக்கு, பாதிக்கப்பட்ட மக்களைத் தள்ளும் இந்த இழிசெயலை செய்யாதிருக்க அனைவரையும் வழிப்பாக இருக்கும்படி தயவாக வேண்டுகின்றோம்"

இவ்வாறு பருத்தித்துறை பிரஜைகள்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"இரவு நேரங்களில் ஊரடங்கு நிலையைச் சாதகமாக்கி மிக அதிகளவில் கிராமங்கள் தோறும் மின்சாரம் களவாடப்படுவதினால் சட்டரீதியான பாவனையாளர்கள் இருளில் தடுமாறும் நிலை ஏற்பட்டுள்ளது' இதன்விளைவு எல்லை மீறினால் மின்மாற்றி வெடித்து எவருக்குமே மின்சாரம் கிடைக்காத நிலை ஏற்படும், எனவே சட்டமுறையற்ற விதத்தில் மின்சாரம் எடுக்காதீர்கள்"

## 'றெட்பானா' வில் கொள்ளை

[வவனியா]

வவனியா கதிரேசன் வீதியில் உள்ள மாவட்ட றெட்பானா அலுவலகத்திலிருந்து ஜெனரேட்டர் ஒன்றும், நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சுமார் பத்துப்பேர் அடங்கிய இனந்தெரியாத ஒரு கோஷ்டியினரே இக் கொள்ளையினை நடத்தியுள்ளார்கள் என தெரிகின்றது.

# கோயில் காணிகள்

## மக்களுக்கு பகிர்ந்தளிப்பு

(புலோலி)

குடவத்தைப பகுதியிலுள்ள சுமார் 100 பரப்பு கோயில் காணி ஏழை மக்களுக்குக் குடியிருப்பதற்குத் தலா இரண்டு பரப்பு வீதம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

துன்னாலை - தெற்குக் கிராம சேவை அலுவலர் திரு. எஸ். ஏ ஞானச்சந்திரனின் அனுசரணையுடன் இக்காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை துன்னாலைப் பிரஜைகள் குழு மேற்கொண்டுவருகின்றது.

இந்த வழங்கப்படவுள்ள குடியிருப்புக் காணிகள் வேம்படி, பருத்தியோலைப் பகுதிகளில் வாழும் வீடற்ற, வருமானம் குறைந்த ஏழைமக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். இக் காணிக்கான பணத்தை மாதாந்தத் தவணையில் செலுத்துவதற்கான வசதிகளைப் பிரஜைகள் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

இக்காணிகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் அம்பகுதி மக்கள் வீ. கே, ஸ்ரீசந்திரா செயலாளர், துன்னாலை பிரஜைகள் குழு, கோயிற்கடவை, கரவெட்டி. என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## திறந்தவெளி பல்கலைக்கழக மாணவர்களுக்கு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பட்டப் படிப்பு, எந்திரவியல் டிப்ளோமா ஆகிய நெறிகளில் 1985ல் பயிலும் மாணவர்கள் அடுத்தமாதம் 2ம்திகதிஞாயிற்றுக்கிழமைபிரதேசஅலுவலகத்தில் (தொழில் நுட்பக்கல்லூரி யாழ்ப்பாணம்) வந்து தமது பதிவுக்கு தேவையான ஆவணங்களை எடுத்துச்செல்லும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற் குறிப்பிட்ட மாணவர்களில் கணிதபாடத்தில் தகைமையற்றவர்களுக்கு மீண்டும் அடுத்த மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பரீட்சை நடத்தவுள்ளது இம்மாணவர்கள் இப்பரீட்சைக்கு தவறாது தோற்றும்படியும்திறந்தவெளி பல்கலைக்கழக பிரதேச அலுவலர் கேட்டுள்ளார்.

## விசாகப் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீமுத்து மாரி அம்பாள் வைகாசி விசாகப் பொங்கலும் திருவிழாவும் நாளை சனிக்கிழமை இடம்பெறும். விசேட பூசைகளும் அபிஷேகமும் நடைபெறும்.

## வானத்திலிருந்து விழுந்ததாம் அந்தக்குண்டு

[கிளிநொச்சி]

இரவுவேளை வானவெளியில் இருந்து பிரகாசமான வெளிச்சத்துடனும் பயங்கர ஓசையுடனும் வந்து வீடொன்றில் விழுந்து வெடித்த ஒருவகை வெடிகுண்டால் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்ததுடன் வீட்டில் படித்துக்கொண்டிருந்த இரு சகோதரிகளும் காயமடைந்த சம்பவம் கிளிநொச்சி திருநகரில் இடம்பெற்றுள்ளது

வீட்டில் இருந்த பெறுமதிமிக்க பொருட்கள், வளவில் இருந்த தென்னை, பலாமரம், முதலானவையும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக வீட்டுச் சொந்தக்காரர் சார்பில் காயமடைந்த சகோதரிகளில் ஒருவரான வே றெமிஜியா மனோராணி கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவிவரிடம் புகார் செய்துள்ளனர்.

## விசேட சம்பளம் கோரி சங்கீத ஆசிரியர்கள் மகஜர்

(கொழும்புத்துறை)

சுன்னாகம் இராமநாதன் அக்கடமியில் கர்நாடக சங்கீதம் பயின்று சங்கீத ரத்தினம் டிப்ளோமாப் பட்டம்பெற்ற ஆசிரியர்கள் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு சங்கீத ரத்தினம் டிப்ளோமாப்பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போலத் தமக்கும் விசேட சம்பளம் வழங்க வேண்டுமென்று கல்வி அமைச்சரை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

சுன்னாகம் இராமநாதன் அக்கடமியே யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவாக இயங்கி வருகிறது. யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவிற்காகச் சுன்னாகம் இராமநாதன் அக்கடமி சுவீகரிக்கப்படுவதற்கு முன்னர் அங்கு கர்நாடக சங்கீதம்பயின்ற சங்கீதரத்தினம் பெற்ற டிப்ளோமாப் பட்டம் பெற்ற சங்கீத ஆசிரியர்களே பாதிக்கப்பட்டவர்களாவர்.

இரு சங்கீதரத்தினம் டிப்ளோமாப்பட்டங்களும் சமதராதரத்தை உடைய போதிலும் தமக்கு விஷேட சம்பளம் வழங்கப்படாது பாரபட்சம் காட்டப்படுவது அநீதியானதென்று சுன்னாகம் இராமநாதன் அக்கடமியில் சங்கீத ரத்தினம் ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## யாழ். செயலகத்தில் காணி பதிவேடுகள்

(சுண்டுக்குளி)

யாழ்.கோட்டைக்குள் பாதுகாப்புக் கருதிவைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தின் உறுதிகளும் இணைப்பிரதிகளும் அங்கிருந்து பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டு யாழ் அரசாங்க செயலகத்தில் [முன்னர் இலங்கை வங்கிக் கிளை இருந்த இடத்தில்] வைக்கப்பட்டுள்ளது

காணிப் பதிவகத்தின் அலுவலகம் இடம் மாறுதென்றும் தற்பொழுது இயங்கிவரும் இடத்திலேயே தொடர்ந்தும் இருக்கும் என்றும் அத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரித்தார்.

## எதிரிக்கு பிடியாணை

[வவனியா]

ஒட்டுசுட்டான் கருவேலன் கண்டல் சூரியபாலேந்திரன் கொலை வழககின் எதிரியான கதிரன் சின்னத்தம்பி வவனியா மேல் நீதிமன்றத்தில் சமூகம் தராமையால் நீதிபதி எஸ். ஆனந்தகுமாரசாமி எதிரிக்கு பிடியாணை பிறப்பித்துள்ளார் அவரது பிணைகாரர்களுக்கும் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

1979-ம் ஆண்டு செப்டம்பர் 20-ம் திகதி கருவேலன் கண்டல் எனுமிடத்தில் வைத்து சூரியபாலேந்திரன் அரிவாளால் குத்திக் கொலை செய்யப்பட்டிருந்தார்

எதிரியின் சார்பில் சட்டத்தரணி கனக மனோகரனும், அரசதரப்பில் திரு எஸ் ஸ்ரீஸ்கந்தராஜாவும் ஆஜராகி இருந்தனர்.

# ஓமந்தை முகாம் அகதிகளை அரச அதிபர் பார்வையிட்டார்

[வவனியா]

அநுராதபுரத்திலிருந்து வந்து ஓமந்தை அகதி முகாமில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களை வவனியா அரச அதிபர் திரு. கே. வி. லோகேஸ்வரன் சென்று பார்வையிட்டு, அவர்களுக்குள்ள குறைகளை கேட்டறிந்துள்ளார்.

வவனியா - யாழ். வீதியில் உள்ள அரசினர் விவசாயப் பாடசாலையிலும் அநுராதபுர அகதிகள் தங்கியுள்ளனர்.

வவனியா பிரஜைகள் குழுவும், கச்சேரி அலுவலகமும் வேண்டிய உதவிகளை செய்து வருகின்றது.

## நாவற்குழியில் வெடிச்சத்தம்

[கல்வியங்காடு]

நாவற்குழிப் பகுதியில் வெடிச்சத்தங்கள் அடிக்கடி இரவு நேரங்களில் கேட்பதால் நாவற்குழி, அரியாலை, கைதடி, கோப்பாய் ஆகிய இடங்களில் வசிக்கும் மக்கள் பயத்துடன் காலத்தைக் கழிக்கின்றனர்.

## நாவாந்துறைக்கு உணவுப் பொதி உதவி கிடைக்கவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

நாவந்துறைக் கடற்றொழிலாளர்களுக்கு உணவுப் பொதிகளை விரைவில் வழங்குவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக றெட்பானா பிரதிநிதி உறுதியளித்தார்.

யாழ். குடாநாட்டில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு றெட்பானா, யூனிசேவ் போன்ற நிறுவனங்களின் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஆனால் நாவாந்துறைக் கடற்றொழிலாளர்களுக்கு இதுவரை இவ் உணவுப் பொதி வழங்கப்படவில்லை.

முன்னாள் கிராமோதய சபை தலைவர் திரு ஆ அமிர்தநாதன், கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ப. சந்திரன், முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. எட்வர்ட் ஆகியோர், றெட்பானா பிரதிநிதியைச் இது சம்பந்தமாக நேற்று முன்தினம் சந்தித்த போது மேற்கண்டவாறு உறுதியளிக்கப்பட்டது. (க)

## மணிவாக்கு

அற்றார் அழிபசிதீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி.

—குறள்.

# நமதுநோக்கு

## பங்களாதேஷ் மக்களின் பரிதாபநிலை

இந்தியாவில் பெரும் பூகம்பம் ஒன்று ஏற்பட்டு அயிரக்கணக்கான மக்கள் அழியநேர்ந்த வேளையில், மனித நேய பண்பாளரான ஜவஹர்லால் நேரு அவர்கள், மகாத்மா காந்தியைப் பார்த்து ''இவ்வளவு உயிர்களும் பலியான வேளையில் உங்கள் கடவுள் எங்கே, விடுமுறையில் சென்றிருந்தாரா?'' என்று கேட்டாராம்.

தெய்வ சங்கற்பத்தில் அதீத நம்பிக்கையுடையவரான மகாத்மாவிற்கு இக்கேள்வி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்குமென்று கருத முடியாது. ஆனால் இம்மாதிரி விடயங்கள் மனித சிந்தனைக்கப்பாற்பட்டவை என அவர் விடை பகிர்ந்திருக்கலாம். இன்றைய மனிதன் மொழி, சமயம், அரசியல் என்ற பேதங்களால் பகைமை கொண்டு திட்டமிட்டு ஒருவனை ஒருவன் அழித்து வருவதைப் பார்க்கையில், எதுவிதபாகுபாடுமின்றி சகலரையும் ஒரே எடுப்பில் தன் கோர நாக்கால் சுருட்டி விழுங்கிவிடும் இயற்கையின்போக்கு பரவாய் இல்லை என்று சொல்லத்தோன்றுகின்றது.

சில தினங்களுக்குமுன் பங்களாதேஷ் நாட்டில் நிகழ்ந்துள்ள இயற்கை அனர்த்தங்களே நம்மை இவ்வாறு சிந்திக்கத்தூண்டுகின்றன.

பயங்கரப் புயலினாலும் கடல் கொந்தளிப்பினாலும் 40 ஆயிரம் மக்கள் அங்கு பலியாகியுள்ளார்கள். பல தீவுக்கிராமங்கள் இருந்த இடம்தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளன. உயிருடன் இருப்பவர்களைக் கண்டு பிடிப்பதிலும், உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்பதிலும் பெரும் தேடுதல் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கென சர்வதேச உதவிகளுக்கு அந்நாட்டு அதிபர் ஜெனரல் எர்ஷாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கிடையில் மேலும் ஒரு புயல் அபாயத்தை அந்நாடு எதிர்நோக்குவதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இயற்கை அழிவுகள் பொதுவாக எல்லா நாடுகளிலும்தான் இடம்பெறுகின்றன. ஆனால் சில வகையான அழிவுகள் சில குறிப்பிட்ட பகுதிகளிலேயே இடம்பெற்று வருவதைப் பார்க்கிறோம். மண் சரிவுகள் மலைப்பாங்கான பகுதிகளிலும், வெள்ளப்பெருக்குகள் ஆறுகள் ஓடும் பகுதிகளிலும், மழைக்காலங்களில் தாழ்வான பிரதேசங்களிலுமே இடம்பெறுகின்றன எனவே அடிக்கடி இப்படிப் பாதிப்புறும் மக்கள் அதற்காகத் தம்மை ஆயத்தம் செய்து கொள்கிறார்கள். ஆறுகளை வேறுபக்கம் திருப்பியும், நீர் நிலைகளைத் தூர் எடுத்தும், அணைக்கட்டுகளை நிர்மாணித்தும் வெள்ள அபாயங்களால் மக்கள் பாதிப்புறாமல் செய்யமுடிகிறது. மலைச் சரிவுகளில் குடியிருப்புகளை ஏற்படுத்தாமல் விடுவதன் மூலம் மண் சரிவுகளிலிருந்து மக்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

நில அதிர்வுகள் அடிக்கடி ஏற்படும் ஜப்பான் போன்ற நாடுகளில் மக்கள் குடியிருக்கும் வீடுகள் தகர்ந்து விழுந்து உயிர் அபாயம் ஏற்படுத்தா தவிதமாகப் பாரமற்ற மெலிதான பொருட்களால் கட்டிடங்கள் அமைக்கட்படுகின்றன.

அதேவிதமாக அடிக்கடி புயலாலும் கடற் கொந்தளிப்பாலும் பாதிப்புறும் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு நவீன உத்திகளைக் கொண்டு உயிர் அபாயங்களைத் தவிர்த்துக் கொள்ள உதவுவது அந்தந்த நாடுகளின் பொறுப்பு.

பங்களாதேஷில் புயல் அபாயம் ஏற்படப்போவது பற்றி சில நாட்களுக்குமுன்னரே இந்திய வானிலை ஆய்வாளர்கள் எச்சரிக்கைசெய்திருந்தனர். ஆனால் இவ்வளவு பாரிய அனர்த்தங்களை அது விளைவிக்கும் என்று பங்களாதேஷ் அதிகாரிகள் கருதவில்லை.

கடல் எழுச்சியினால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய தீவுகளிலிருந்து மக்கள் முன்கூட்டியே அப்புறப்படுத்தப்பட்டிருந்தால் இந்தப் பேரழிவிலிருந்து அநேகரைக் காப்பாற்றியிருக்க முடியும்.

ஆயிரக்கணக்கான இளந் தலைமுறையினரைப் பலி கொடுத்து விடுதலை பெற்ற பங்களாதேஷ் மெதுவாக வளர்ந்துவரும் ஒரு நாடு. எனவே இப்படியானபாரிய இயற்கை அழிவுகளை அதனால் தாங்கிக் கொள்வது சிரமம். அதனாலேயே அதிபர்எர்ஷாத் சர்வதேச உதவிகளை நாடிநிற்கின்றார்.

உலக நாடுகள் குறிப்பாக செல்வமிக்க மேலைநாடுகள் இதற்கு பண உதவிகள் மட்டுமின்றி புயல்-கடல் எழுச்சிபோன்ற இயற்கை அழிவுகளால் அடிக்கடி பாதிப்புறும் இப்பிரதேசத்தில் மக்கள் அல்லலின்றி வாழ்வதற்கு நவீன ஆய்வுகள் மூலம் வழி சமைத்திட உதவவேண்டும்.

## றமழான் சிந்தனை

எவர் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிப்படுகின்றார்கள்ளா அவர்கள் அல்லாஹ்வின் அருளைப் பெற்ற நபிமார்கள்; சத்தியவான்கள்; பிராணத்தியாகிகள் நல்லொழுக்கமுடையோர் ஆகியோருடன் (மறுமையில்) வசிப்பார்கள். இவர்கள் தவம் மிக்க அழகான தோழர்கள். இது இறைவனின் பேரருளாகும். (இவர்கள் நற்செயலை) அல்லாஹ் அறிவதே போதுமானதாகயிருக்கிறது.

(திருக்குர்ஆன் 4:69,10)

நோன்பு துறக்கும் நேரம் (மஃருப்) 6.22

நோன்பு ஆரம்பிக்கும் நேரம் (ஸஹர் முடிவு) 4.18,

—தாராபுரம் ஹாறூன்,

### நூல் நிலையத் தீக்கிரை நினைவு

# அறிவுக்களஞ்சியத்தின் அழிவு இன்னும் ஓயவில்லை

ஈழத் தமிழர்களின் வாழ்க்கையில் மறக்க முடியாதது ஜூன் மாதம்!

ஈழத்தமிழர்களின் இன்றைய இன்னல்களுக்கெல்லாம கால்கோளாய் அமைந்த சிங்களம் மட்டும் மசோதா கொண்டுவரப்பட்டது ஜூன் மாதம்!

தொழிலாள வர்க்கத்துக்காகத் தன் உயிரை அர்ப்பணித்த தியாகி கந்தசாமி உயிர்துறந்ததும் அவரது நினைவாக எழுப்பப்பட்ட நினைவுச்சின்னம் உடைத்தெறியப்பட்டதும் ஜூன் மாதத்தில்தான்!

இவை எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ்மக்களின் அறிவுப்பெட்டமாகப் பண்பாட்டுக் களஞ்சியமாக விளங்கிய தென்கிழக்காசியாவிலேயே சிறந்த நூலகங்களுள் ஒன்றான யாழ்ப்பாணப் பொதுநூல் நிலையம் தீயவர்களால் தீவைக்கப்பட்டுத் தேடற்கரிய தொண்ணூற்றேழாயிரம் நூல்களையும் தீக்கிரையாக்கிய துர்ப்பாக்கிய சம்பவம் நிகழ்ந்தது ஜூன் மாதம் முதல் தேதியே!

1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதி யாழ்ப்பாணத்தில் அறிவுச்சுரங்கத்துக்குக் கொள்ளிவைக்கத் தொடங்கிய கூட்டம் இன்னும் ஓயவில்லை.

கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள மற்றும் பல நூல் நிலையங்களைத் தீவைத்துப் பொசுக்கியிருக்கிறது.

ஓர் இனத்தை ஒரு சமுதாயத்தை நாசமாக்கவேண்டுமானால் அந்த இனத்தின், சமுதாயத்தின் அறிவாளிகளையும் அறிவுக்களஞ்சியங்களையும் அழித்துவிடுவதே சுலபமான வழி!

பங்ளாதேஷ் உருவாகுமுன் கிழக்குப் பாகிஸ்தானில் கடைசிக் கட்டமாக இக்கைங்கர்யமே நடந்தது.

யாழ்ப்பாண நகரில் 1931-ம் ஆண்டில் திரு. கே. எம். செல்லப்பாவினால் இன்று அழிக்கப்பட்டுவரும் யாழ். மாநகர சபைக் கட்டிடத்துக்குக் கிழக்கேயமைந்துள்ள மாடிக்கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்ட நூல்நிலையம் பின்னர் நகர சபையால் நிர்வகிக்கப்பட்டு நகருக்கே சொந்தமாக்கப்பட்டது

1949-ம் ஆண்டில் யாழ்ப்பாண நகரசபை மாநகரசபை அந்தஸ்தைப் பெற்றபோது நகரின் முதலாவது மேயராக திரு. சாம் ஏ. சப்பாபதி தெரிவானார். அறிவும் செயல்திறனும் கொண்ட மேயர் சாம் சபாபதி, வண. பிதா. லோங் அடிகளாருடனும் மற்றும் கல்விமான்களுடன் ஆலோசனை செய்து யாழ். நகரில் தென்கிழக்காசியாவிலேயே சிறந்ததாக ஒரு நூல்நிலையத்தை அமைப்பதற்குத் திட்டமிட்டார்.

புகழ்பூத்த கட்டிட சிற்பியான திரு. சி. வி. நரசிம்மன் திராவிட சிற்பவியல் முறையில் யாழ். நூல்நிலையத்துக்கு வடிவமைத்துக் கொடுத்தார் பொதுமக்களினதும் இந்திய உயர் ஸ்தானிகரகத்தினதும் ஆசிய பவுண்டேஷன் நிறுவனம் முதலானவற்றின் உதவியுடன் நூலகத்தின் முதற்கட்ட வேலைகள் பூர்த்தியாகி 1959-ம் ஆண்டில் நூலகம் செயல்படத் தொடங்கியது. திரு. சாம். சபாபதி திட்டமிட்டபடி நூல் நிலையத்தை முழுமையாக நிறைவேற்றி வெளிநாடுகளிலிருந்து அறிஞர்கள் இங்குவந்து தங்கி ஆராய்ச்சி செய்வதற்கும் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்ற ஆவல் இங்குள்ள கல்விமான்கள் மத்தியில் தொடர்ந்திருந்து வந்தது.

ஆட்சிபீடத்துக்கு வந்தஅரசுகளின் போதிய ஆதரவு ஒத்துழைப்பும் இந்நூல் நிலையத்துக்கு கிடைக்கவில்லை.

இந்நூல் நிலையம் 1981-ம் ஆண்டு ஜூன் முதல்தேதி தீவைக்கப்பட்ட பின்னரும்கூட இந்நூல் நிலையத்தின் பெறுமதியை உணர்ந்து அதைப் புனரமைக்கவேண்டுமென்ற ஆர்வமோ அக்கறையோ காண்பிக்கப்படவில்லை.

1981-ம் ஆண்டு மே மாதம் 31-ந் திகதியும், ஜூன் முதல் தேதியும் யாழ். நகரில் நடந்த கொள்ளிவைப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக தமிழ மக்களின் கோரிக்கைகளையும் வெளியுலகத்தின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ளவும் திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையில் மூவர் விசாரணைச் சபையொன்று நியமிக்கப்பட்டது.

**எஸ். எம். ஜி.**

இவ் விசாரணைச்சபை தனது கடமையைச் சிறப்பாகவும், துரிதமாகவும் நிறைவேற்றிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான சிபார்சுகளைச் செய்தது. அவை நிறைவேற்றப்பட்டன.

ஆனால் யாழ். பொதுநூல் நிலையத்துக்கு லயனல் பெர்னாண்டோ விசாரணைச்சபை சிபார்சு செய்த ஒருகோடியே இரண்டு லட்சம் ரூபா நஷ்டஈடு இன்னமும் வழங்கப்படவில்லை.

இதேசமயம் நஷ்டஈடு வழங்குவது பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற சந்தேகத்தில் தனிப்பட்டவர்களைப் பின்பற்றிய யாழ். மாநகர சபையும் நூல்நிலையத்துக்கு நஷ்டஈடுகோரி நீதிமன்றததில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

லயனல் பெர்னாண்டோ விசாரணைச்சபையின் சிபார்சுக்கிணங்க நஷ்டஈடு கிடைக்குமென்று நம்பியும் வாக்குறுதியை நம்பியும் அந்தவழக்கை நிர்வாகத்திலிருந்த சபை வாபஸ் பெற்றுக்கொண்டது.

பொதுமக்களின் நன்கொடைகளாலும் பல வெளிநாட்டு நிறுவனங்களின்உதவியினாலும் யாழ். பொதுநூல் நிலையத்தின் புதிய கட்டிடமும் முற்றுப் பெறுகின்றது.

ஆனால் இன்று யாழ். நூல் நிலையம் பொதுமக்கள் சென்றுவரக்கூடிய சூழ்நிலையில்இல்லை ஆனாலும்கட்டிடமாவதுசேதப்படாமல் மிஞ்ச வேண்டுமே என்று கவலை கொள்ளாதார் சிலரே?

1981-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதி அறிவுப் பெட்டகத்துக்கு வைத்த தீ இன்றுவரை சுற்றிப் பிடித்துள்ளவற்றையும் நினைவிற் கொள்வது அவசியம்.

பருத்தித்துறை உவெஸ்லியன் மிஷனின் 150 வருடகால புத்தகச்சேர்வுகளுடன் ஹாட்லிக் கல்லூரி நூலகம் தீக்கிரையான 1984ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல் தேதி 2000 புத்தகச் சேர்வுகளுடன் திக்கத்திலுள்ள நூலகம் கொளுத்தப்பட்டது இதே ஆண்டு இதேமாதம் கடைசி வாரத்தில்

அரியாலை கலைமகள் வட்டாரத்திலுள்ள சரஸ்வதி சன சமூக நூல்நிலையம் தீக்கிரையானது 1985 ஏப்ரல் கடைசி வாரம்!

காரைநகர் கடற்படை முகாம் தாக்குதலையடுத்து சுவீடிஷ் நன்கொடை மூலம் நிறுவப்பட்ட காரைநகர் குளோப் நூலகம் 1985 மே மூன்றும் தேதி தீக்கிரையானது.

வல்வெட்டித்துறை சன சமூகநிலையக்கட்டிடம் மனிதர்களுடன் குண்டுவைத்துத் தகர்த்து உயிருடன் சமாதியானதும் இதேகாலத்தில்தான்!

அறிவகங்களும் அறிஞர்களும் எதிர்காலத்தில் என்ன நிலையோ!

### 40 வருடங்களுக்கு மேல்

## அநுராதபுரத்திலிருந்த தமிழர்களும் வெளியேற்றம்!

[வவனியா நிருபர் விவேகராசா]

நாற்பது வருடங்களுக்கு மேலாக அநுராதபுரத்தில் குடிகொண்டிருந்த தமிழர்களும் தற்போது வீடு வாசல்களையும். உடமைகளையும் இழந்து அகதிகளாக வவனியாவந்துள்ளனர்.

அநுராதபுரத்தில் அரசகட்டிட ஒப்பந்த வேலை செய்யும் திரு. கே செல்வராஜா என்ற 43 வயதான நபரைச் சந்தித்தேன்.

அவர் கூறினார்:-

''நான் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவன் 40 வருட காலமாக அநுராதபுரத்திலேயே வசித்துவந்துள்ளேன். 1977 கலவரத்தில் எனது வீட்டுக்குச் சிறுசேதம் ஏற்பட்டது எனது குடும்பம் கண்டியில் இருக்கின்றது.

எனக்கு அநேக நண்பர்கள் அநுராதபுரத்தில் உள்ளனர். எனது சமையல்காரன்கூட சிங்களவர்தான்.

14ம் திகதி சூட்டுச் சம்பவம் நடந்துமுடிந்தவுடன் பலர் எனக்குச் சொன்னார்கள், 'நீங்கள் எங்களுடன் வரது இருங்கோ! பெரிய பிரச்னை வரும்போல இருக்கிறது' என்று கூறினார்கள்.

நான் ஒருவருடைய வீட்டுக்கும போகவிரும்பவில்லை.எனது நண்பர் ஒருவரிடம் எனது கார் திறப்பைக் கொடுத்து காரைப் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் சென்றுவிடும்படி கூறிவிட்டு அநுராதபுரம் வேதக் கோவிலுக்குப் போய்த் தஞ்சம் புகுந்தேன்''

17ம் திகதி பாதுகாப்பாக இருந்த தமிழர்கள் மீது இராணுவ சிப்பாய் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த வேளையில் அங்கு இருந்த பெண்மணி ஒருவர் இங்கு அகதியாக வந்திருந்தார்.

அவர் கூறியது:

''நாங்கள் குடும்பத்துடன் நான்கு நாட்கள் காட்டில் இருந்தோம் எங்கள் அயல் வீட்டுச் சிங்களக் குடும்பங்கள் உணவு தந்து எம்மை காப்பாற்றினார்கள். அதனை நாம் மறக்க முடியாது. பாதுகாப்பின் நிமித்தம் 17-ம் திகதி மதியவேளை சாப்பாட்டுக்கு இராணுவ முகாமுக்குப் போனோம் சாப்பாட்டுப் பார்சல் தந்தார்கள்.

எங்களைப் போன்று அநேக ஆட்கள் அங்கு இருந்தார்கள். கட்டை காற்சட்டை போட்ட கடடையான ஒருவன் எங்களை வந்து ஒருமாதிரி பார்த்தான். பின் போய்விட்டான்.

பகல் 3 மணி இருக்கும் குறித்த அந்த கட்டையான நபரே வந்து எங்கள்மீது சுட்

(8ம் பக்கம் பார்க்க)

# தமிழரின் பாரம்பரிய பிரதேச ஆய்வை மேற்கொண்டவர்

## நினைவஞ்சலியில் பேராசிரியருக்கு புகழாரம்

[கல்வியங்காடு]

''தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை ஆராய்ந்து அவற்றின் புவியியற் காரணி தொடர்புகளை வெளிக் கொணரவும், ஆராய்வுச் சூழலை வெளிப்படுத்துவதிலும், செயற்படவேண்டியவற்றைச் செயற்படுத்த வேண்டும் என்பதற்காகச் செயற்பட்டவர்கள் பேராசிரியர் சோ. செல்வநாயகம் ஆவர்''.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவாக நிகழ்த்தப்பட்ட நினைவுரையின்போது பேசிய கலாநிதி சி. க. சிற்றம்பலம் குறிப்பிட்டார்.

கலைப்பீடாதிபதி திரு. என். பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நினைவுச் சொற்பொழிவினை யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

பேராசிரியர் சோ. செல்வநாயகத்தின் 6-வது நினைவு தினத்தின் இரண்டாவது சொற்பொழிவில் நினைவுரை நிகழ்த்திய விலங்கியற்றுறைப் பேராசிரியர் வி கே கணேசலிங்கம் குறிப்பிடும்போது, ''புகழ்பெற்ற கனகசபாபதி, செல்வநாயகம், கைலாசபதி ஆகிய மூன்று பேராசிரியர்களை தமிழ் மக்களாகிய நாம் இன்று இழந்தவர்களாகவுள்ளோம்

பேராசிரியர் கனகசபாபதி நினைவாக விஞ்ஞானப் பரிசில்களை வழங்குகிறோம். பேராசிரியர் கைலாசபதிபெயரில் யாழ். பல்கலைக்கழகத்தில் கலையரங்கம் நிர்மாணித்துள்ளோம். பேராசிரியர் செல்வநாயகம் நினைவாகச் சொற்பொழிவுகளை நிகழ்த்துகிறோம்'' என்றார்.

அவர் மேலும் பேசுகையில், ''பேராசிரியர் செல்வநாயகம் மக்களுக்காகச் சேவை செய்தவர். மக்கள் மத்தியில் சென்று கருத்தரங்குகள் நடத்தியவர். வெளிநாடு சென்று திரும்பிய போதிலும் தானும் குடும்பமும் என்றில்லாமல் தொடர்ந்து தனது சேவையை ஓய்வின்றிச் செய்துவந்தார். அவரின் இழப்பு மிகவும் துக்கமானது'' என்றார்

புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, 'வடக்குக், கிழக்குப் பிரதேசக் குடித்தொகைப் பெயர்வு' என்ற பொருள்பற்றி நினைவுச் சொற்பொழிவாற்றினார்.

இறுதியில் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ் பாலச்சந்திரன் நன்றிதெரிவித்தார்.


# 1986-ம் கல்வியாண்டில் கல்வி வலயங்களை பிரிக்கும் வேலைகள் ஆரம்பம்

(கல்வியங்காடு)

1986-ம் கல்வியாண்டில் நாட்டில் உள்ள சகல கல்விப் பிராந்தியங்களிலும் ஏற்படுத்தவுள்ள கல்வி, நிர்வாக மாற்றங்களுக்காக தற்சமயம் ஒவ்வொரு கல்வி வட்டாரங்களிலும் கல்வி வலயங்கள் பிரிக்கப்படும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வகையில் நல்லூர் கல்வி வட்டாரத்தில் மூன்று கல்வி வலயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

யாழ். இந்துக் கல்லூரியை மையமாக வைத்து வண்ணார் பண்ணைப் பகுதிகள் அடங்கிய 12 பாடசாலைகள் ஒரு பிரிவாகவும், யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தை மையமாக வைத்து அரியாலைப் பகுதிகளைச் சேர்ந்த 15 பாடசாலைகள் மற்றொரு வலயமாகவும், கொக்குவில் இந்துக் கல்லூரியை மையமாகக்கொண்டு கொக்குவில் கோண்டாவில் பகுதிகளில் உள்ள 12பாடசாலைகள் மூன்றாம் வலயமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப பாடசாலைகள் உட்பட சகல பாடசாலைகளும் வலயங்களுக்குள் அடங்குகின்றன.



இலங்கை சைவமன்றம் பருத்தித்துறை பர்வதவர்த்தனி கலா மண்டபத்தில் ஆரம்பித்துள்ள வேதாகம திருமுறைப்பள்ளி, சைவநூல்நிலையம் என்பவற்றின் திறப்பு விழாவை தொழிலதிபர் திரு. அ நாகரத்தினம் [குகன்] திருமதி சின்னம்மா நாகரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் புலோலி கிழக்கு முன்னாள் கிராமோதைய சபைத் தலைவர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம், மன்றத்தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் ஆகியோரையும் காணலாம்.

[படம்-கரவெட்டி வரதன்]

## கூட்டம்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கப் பொதுச்கூட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி பா. கந்தசாமி தலைமையில் நடைபெறவிருக்கின்றது.


சிவமயம்







சுழிபுரம் பறளாயம்பதியில் அருள்பாலிக்கும்

விநாயகப் பெருமானுக்கும் முருகப் பெருமானுக்கும் அமைந்த

# புதிய சித்திரத் திருத்தேர்

# வெள்ளோட்ட விழா

பேரன்புடையீர்!

ஈழமணித் திருநாட்டின் வடபாலமைந்த யாழ்ப்பாணத்தின் மேற்றிசையில் அமைந்தது சுழிபுரம். இப்பெரும்பதியில் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனச் சிறப்புப் பெற்ற பறளாய் ஆனைமுகனதும் ஆறுமுகனதும் ஆலயங்கள் இரு கண்களாக இங்கு திகழ்கின்றன எம்பெருமான்களது அருளினாலும் அடியார்களது உதவியினாலும் அழகிய புதிய சித்திரத்தேர் ஆலய அபிவிருத்திச் சபையினால் உபயமளிக்கப்பெறறது.

நிகழும் குரோதன ஹூ வைகாசித் திங்கள் 19-ம் நாள் (1-6-85) சனிக்கிழமை (நாளை) காலை 10-30 மணிக்கு இத்திருத்தேரின் வெள்ளோட்ட விழா நடைபெற எம்பெருமான் அருள்பாலித்திருப்பதனால் அடியார்கள் அனைவரும் வருகைதந்து அவனது அருள்பெற்றேகுமாறு அன்புடன வேண்டுகின்றோம்.

★ புதிய சித்திரத்தேர் உருவாக்கம்

ஈழத்தில் பல சித்திரத்தேர்களை உருவாக்கிப் புகழ்பெற்ற சிற்பகலாமணி சிற்பரக வித்தகர் சிற்பராஜசிகாமணி ஸ்தபதி திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சிவரட்ணம் ஆச்சாரியாரும், சகோதரர்களும் குழுவினரும்

வெள்ளோட்டவிழா எமது சபையின் தலைவர் திரு ஆறுமுகம் இராசபசம் அவர்களது தலைமையில் நடைபெறும். விழாவில் விசேடபூசைகள், ஆராதனைகள், சிற்பாச்சாரியார்களின் உபசரணைகள் மேளகச்சேரிகள் ஆகியன நடைபெறுவதுடன் ஆசிரியை பண்டிதை பொன் பாக்கியம் அவர்களின் விசேட சொற்பொழிவும் இடம்பெறும்.

ஆகவே அடியார்களை சித்திரத் திருத்தேரின் கொலுவையும், அழகையும் பவனிவரும் சிறப்பையும் விழாவினது மகிமையையும் கண்டின்புறும் வண்ணம் வருக! வருகவென அழைக்கின்றோம்.

3515

சுழிபுரம்-பறளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய அபிவிருத்திச்சபை

## நிவாரணப் பணியில் சமூக ஸ்தாபனங்கள்

[யாழ்ப்பாணம்]

உரும்பராயில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின் காரணமாக உரும்பராய் செல்வபுரம் கிராமவாசிகள் பாதுகாப்புத் தேடி பொது இடமொன்றில் தஞ்சமடைந்தார்கள்.

அவர்களுக்கு உணவு வழங்குவதற்காக திருநெல்வேலி பொதுச் சந்தை, கோண்டாவில் நாராயணகிராமம், மாதர் மறுமலர்ச்சிப் பேரணி, கோண்டாவில் சென். செபஸ்தியார் கிராமம் ஆகியன நிதியுதவி வழங்கின.

இவைதவிர கோண்டாவில் கிழக்கு நாராயண கிராம அபிவிருத்திச் சங்கம், மறு மலச்சி விளையாட்டுக் கழகம் ஆகியவையும், திரு. முதத்தையாவும் உணவுப் பொருட்களை வழங்கினர். கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் தலைமைக் கமிட்டி இந்த நிவாரணவேலைகளை முன்னின்று செய்தது. (ரா)

## பண்டத்தரிப்பில் தபால்சேவை ஸ்தம்பிதம்

(பண்டத்தரிப்பு)

கடந்த ஐந்து தினங்களாக பண்டத்தர்பபுப் பகுதியில் தபால் விநியோகம் நடைபெறவில்லை.

## சிங்கள உ. அ. அதிபர் பிரிவு: வவனியா கச்சேரி வளவுக்குள் வரும்?

[வவனியா]

வவனியா - மன்னர் வீதியில் காமினி மகா விததியாலயத்திற்கு அருகாமையிலுள்ள சிங்களப் பிரிவு உதவி அரச அதிபர் அலுவலகத்தினை வவனியா கச்சேரி வளவிற்குள் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றதென தெரியவந்துள்ளது.

இதற்கான அங்கீகாரத்தினை மேலிடத்திலிருந்து பெற முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

## மீன் வியாபாரி பஸ் விபத்தில் பலி!

(யாழ்ப்பாணம்)

குருநகரில் மீன்வாங்கி கைதடிக்கு சைக்கிளில் விற்று வந்த வயோதிபர், சம்பவத்தினம் பஸ் விபத்தில் பலியானார்.

நல்லூரைச் சேர்ந்த சரவணமுத்து முத்தையாவின் (63 வயது) மரண விசாரணையில் மேறகண்ட தகவல் தெரிய வந்தது.

யாழ். உத்தியோகப்பற்ற நீதவான் ஏ. அன்ரனி நேற்றுக்காலை மரணவிசாரணை நடததினார்.

இறந்தவரின் மனைவி இராசம்மா சாட்சியமளிக்கையில், கணவன் தினமும், குருநகரில் மீன் வாங்கி கைதடியில் விற்று வருவது வழக்கமென்றும், சம்பவதினமும் கணவன் வியாபாரத்திற்கு சென்றுரென்றும் பிற்பகல் அவர் இறந்து விட்டதாக அறிந்ததாகவும்கூறினார்.

யாழ். பொலிஸ் சார்ஜன்ட் பரமேஸ்வரன் சாட்சியமளிக்கையில், சம்பவதினம் காலை, பஸ்ஸில் வந்ததாகவும் கைதடி ஆஸ்பத்திரி தரிப்பில் ஒருமினிபஸ் நின்றதாகவும், அதனை விலத்தி வந்தபோது எதிரில் சைக்கிளில் வந்தவர் மோதி விழுந்ததாகவும் காயமடைந்த அவரை தான் மினிபஸ் ஒன்றில், யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பியதாகவும் கூறினார். விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)



# "ஆலயத் திருப்பணிகளில் பெரும் அக்கறை கொண்டவர்"

[சங்கானை]

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்தெய்வத்துள் வைக்கப்படும். இது வள்ளுவப் பெருந்தகையரின் அமுத வாக்கு. நிலையில்லாதன வற்றை நிலையென எண்ணி வாழ்க்கை நடத்தும் ஒரு சிலர் விதிவிலக்காகின்றார்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பன ஒருவருக்கு இருக்கவேண்டிய பண்புகள்" என்று சங்கானை வெல்வில் ஸ்ரீசுப்பிரமணியப் பெருமான் ஆலய மணி மண்டபத்தில் நடைபெற்றஅமரர் வீர.சோமசுந்தரத்தின் அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய பொ. சிவகுரு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "அமரர் வீர. சோமசுந்தரம் சங்கானையில் பிறந்து வளர்ந்து படித்து மலேஷிய நாடு சென்று தபால் அதிபராக கடமையாற்றி வந்தார். அப்பதிவியிலிருந்த போது சைவத்தையும் தமிழையும் அந்த நாட்டிலே வளர்க்கப் பெருந்தொண்டாற்றினர். அத்துடன் அவரது கிராமமாகிய சங்கானையில் அமைந்துள்ள வெல்வில் ஆலயத்தில் லட்சக் கணக்கான பணத்தைச் செலவு செய்து இராஜகோபுரம் ஒன்றையும் அமைத்து, திருப்பணி வேலைகளையும் செய்துகொடுத்தார்" என்றார்.

"அமரர் வீர. சோமசுந்தரம் அறவாழ்ந்து புராண படனம் சிறப்பாக மலேஷியாவில் நடக்க உதவுயதுடன் குறிப்பாக 'கந்த புராண மகிமையை' எல்லோரும் உணரச் செய்தார்" என்று திரு சி. க. திருச்சிற்றம்பலம் குறிப்பிட்டார்.

திரு. கார்த்திகேசு பேசுகையில்; "ஆலயத்திருப்பணிகளில் அக்கறை காண்ட ஒரு பெரியார் நமது மத்தியில இல்லாதது மிகவும் வருந்தவேண்டிய தொன்று. எனினும் அவரது செயற்பாட்டினுல் அவரை நினைவு கூறுவது நமது கடமையாகும்" என்றும் கூறினர் திருவாளர்கள் க. இராசதுரை புலவர்மணி வே. கனகசபாபதி ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்கள்.

## இடிந்து விழும் நிலையில் மடம்

(பண்டத்தரிப்பு)

பொன்னலை கொத்துத் துறை இந்து மயானத்திலுள்ள மடம் இடிந்து விழும் நிலையில் உள்ளது. 1890-ம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த மடத்திலுள்ள கருங்கற்களை சிலர் களட்டிக் கொண்டு சென்றதால் கட்டிடம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி மக்கள் பயன்படுத்தும் இந்த மயான மடம் திருத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## விழிப்புக்குழு அமைத்தனர்

[யாழ்ப்பாணம்]

குருநகர் தொடர்மாடி வீடுகளில்குடியேறியவர்கள் 15பேர் கொண்ட விழிப்புக்குழு ஒன்று அமைத்துள்ளனர்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. ரி. பி முருகையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விழிப்புக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. பி. இராசரத்தினம், செயலாளர்: திரு. அ கனியூட் பேணைஸ்ட் உறுப்பினர்கள் திருவாளர்கள் ஏ. அருள்தாஸ், சில்வஸ்டர் யேசுதாசன், எம் சேவியர், சு. சிவலிங்கம், வே பத்மநாதன், அ. ஜோர்ஜ், எஸ். எஸ். எமிலியூர், இ. செபமாலை, இ நீக்கிலாஸ், ஜே தேவசகாயம், லூ. ஜே. ஜேக்கப். சூ. சவரியான். (மா)

## அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சமூகசேவைத் திணைக்களத்தின் மாதாந்த உதவிப்பணமும் பெற்று வரும் வறிய மக்களுக்குக்கான படிப்பணம் மேலும் அதிகரிக்கப் பட்டுள்ளது. அவ்வப் பகுதி கிராம சேவை அலுவலர்களின் சிபார்சின் பேரில் கடந்த ஏப்பிரல் மாதம் தொடக்கம் இந்த அதிகரித்த படிப்பணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது


## பற்றிஷயன் இன்ஸ்ரிரியூட்ஸ்

சகல பயிற்சிகளுக்கும் உரிய எமது அடுத்த வகுப்புகள் 15-6-1985ல் ஆரம்பமாகின்றன.

சேரவிரும்பின் இவ் நிறுவனத்துக்கு நேரில் வந்து விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் பெற்று உடன் விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்,
பற்றிஷயன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சன் பற்றிக்ஷ் வீதி,
யாழ்ப்பாணம்.


## 31-ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்

முத்தமிழ்ஜோதி,
கதாகலாட்சேபமணி

ஆறுமுகம்
கணபதிப்பிள்ளை

அல்வாய் தெற்கு



தோற்றம்:

8-12-1897

மறைவு:

2-5-1985

கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னள் விரிவுரையாளர் ஆறுமுகம் கணபதிப்பிள்ளை அவர்களின் அந்தியேஷ்டி 1-6-85 சனிக்கிழமை அல்வாயில் நடைபெறும். உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். இவர் நெல்லியடி Model School அதிபராகவும், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர். காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும், மாணிக்கநாயகம் (CHEMIST) சிமெந்துக் கூட்டுஸ்தாபனம். சபாநாயகம் (ஆங்கில ஆசிரியர்), சிவானந்தநாயகம் (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை), காலஞ்சென்ற பத்மநாயகம், திருமதி பரமேஸ்வரிதேவி சிவராசா (U K.), மகேந்திரநாயகம். திருமதி மகேஸ்வரிதேவி தில்லைநாயகம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அல்வாய் தெற்கு
கரவெட்டி.

தகவல் தருபவர்:
க. மாணிக்கநாயகம்.

3541


சிவன் மினி சினிமா
K. K. S. ரோட் சிவன் கோயிலடி சந்திக்கு முன்பாக
10-30. 2-30
எம்.ஜி.ஆர் - சரோஜா தேவி நம்பியார் - அசோகன் நடித்த
தெய்வத்தாய்

ஸ்ரான்லி மினி
'5X5, திரையில்
10-30 மட்டும்
மோகன், ஆனந்தபாபு, ரேவதி, லஷ்மி நடித்த
"உதய கீதம்"
(சிறந்த படால்கள் நிறைந்தபடம்)
2.30 மட்டும்
ஆனந்தபாபு கார்த்திக் அனுராதா
நடித்த
புயல்கடந்த பூமி
திரைப்படங்கள் மூலப் பிரதிகளிலிருந்து பிரதி பண்ணிக்கொடுக்கப்படும்.

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30. 2 30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
சலங்கை ஒலி
கடைசிவாரம்

ஆனந்தி
விடியோ சினிமா
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
எம்.ஜி.ஆர் -சரோஜாதேவி
நடித்த
பறக்கும் பாவை
(கலர்)
1 — 6 — 85 முதல்
நான் ஆணையிட்டால்

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் சாதனைபடைத்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
விதி
(கலர்)

மொடேர்ண்
மினி சினிமா
ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு அருகாமை
CRUEL PASSION
வயது வந்தவர்களுக்கு மட்டும்
தினசரி 3 காட்சிகள்

லதா மினி
(கோண்டாவில்)
சிவாஜி - பிரபு
'நாம் இருவர்'
(தந்தையும் மகனும் புகழ் ஏணியில் போட்டி)
10-30 காலை மாலை 3-00

ஸ்டோர் சினிமா
சுதாகர் - ராதிகா
நடித்த
ஆயிரம வாசல் இதயம்
(ஈஸ்மன் கலர்புதியகொப்பி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30. 2.30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
மௌன கீதங்கள்
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

யாழ். வின்ஸர் மினி
தினசரி 10-30, 2-30
முரளி- லக்ஷ்மி- இளவரசி ஜெய்சங்கர் - தேங்காய் சீனிவாசன் Y.G. மகேந்திரன் நடித்த
"அந்தஸ்து"
காதல் ஓவியம்
(புதிய வெளியீடு)

STL மினிசினிமா
காட்சி 10.30- 2 30 -4 30
Onnar Nutha
பாலஸ்தீன சுதந்திரத்திற்காக இரத்தம் சிந்திய இளைஞர்களின் வீர வரலாறு, திகிலூட்டும் பயங்கர சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்)


## புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்.

### அறிவித்தல்

அன்புடையீர்,

மேற்படி ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையின் விசேட மகாசபைக் கூட்டம். 09-06-1985ந்திகதிஞாயிற்றுக்கிழமை மாலை 2-00 மணிக்கு கோவில் மண்டபத்தில் நடைபெறும் அம்பிகை அடியார்கள் அனைவரும் தவறாது சமுகந்தரவும்.

3527

ந. செல்லத்துரை,
உப செயலர்.


## பதவி வெற்றிடம்

விற்பனைப் பிரதிநிதி / எழுதுவினைஞர் / பியோன்

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மருத்துவ பொருட்கள் வியாபார முகவர் நிலையம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

(i) எழுதுவினைஞர்
(ii) விற்பனைப் பிரதிநிதி.
(iii) பியோன்.

தகைமை, முன்அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் வேதனம் வழஙகடபடும் 10-06-85க்கு முன்னர், விளம்பர இல: 3532 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற முகவரிககு விண்ணப்பிக்கவும். 3532

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு "மேற்கு ஜெர்மனி 'BASF'" தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 18/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2 ஞானர்த்தபிரதீப மாவத்தை, த.பெ.இல-9
(முன்னுள் மருதானைரோட்) கொழும்பு - 8
தொலைபேசி; 597965—9

★ கிளிநொச்சி மாவட்டம

# பாவனையாளர் சங்கங்கள் கலைக்கப்பட்டன!

(சுண்டுக்குளி)

கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள சகல பாவனையாளர் சங்கங்களும் உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் சி. மார்க்கண்டு அவர்களினல் கலைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இச்சங்களைப் புனரமைப்புச் செய்வதிலும் புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதிலும் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமுள்ள உள்நாட்டு வியாபார பரிசோதகர்களும் கிராம சேவையாளரும் விசேடசேவை அலுவலர் ஆகியோருடன் கலைக்கப்பட்ட பாவனையாளர் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரும் ஈடுபட்டுள்ளனர்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை அறிவதற்கு அந்தந்தப் பகுதி கிராம சேவை அலுவலர், உதவி அரசாங்க அதிபர், உள்நாட்டு வியாபரர பரிசோதகர் ஆகியோருடன்தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## 'இவர்களும்'...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சொந்த ஊருக்கு இடமாற்றம் கோரியுள்ளதாக அறியப்படுகிறது.

கடந்த 14ம் திகதி அநுராதபுரத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்துக்குப் பின்னரே குறிப்பிட்ட ஆசிரியர்கள் இடமாற்றம்கோரியுள்ளதாகத் தெரியவருகிறது. [மா]

யாழ். ஐ. வி. சங்க ——

# கிளைகளில் விற்பனையை குறைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

முன்பு நடந்த கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கக் கிளைகளில் விற்பனையைச் சுருக்கிக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிளைகளில் படிப்படியாக விற்பனையைக் குறைத்து, இக்கிளைகளைகளை மூடிவிடுவது பற்றியும் ஆலோசிக்கப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனலும் பங்காளரின் பொதுக் கூட்டத்திலேயே இவ்விடயம் பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும்.

கொழும்பிலிருந்து பொருட்களை இங்கு கொண்டுவருவதிலும், கிளைகளுக்குப் பொருட்களை அனுப்பும்போதும், கிளைகளில் பொருட்கள் இருக்கும் போதும் போதிய பாதுகாப்பு இல்லாததனலேயே கிளைகளில் விற்பனையைச் சுருக்க முடிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. [க]

## வானொலி

மாலை

5-00 செய்திகள்
5-05 'வூடிவூகட் பெக்கர்' (ஆங்கிலம்)
5-30 'ஸ்பைடர் மேன்' (ஆங்கிலம்)
6-00 வனவிலங்குகள்பற்றிய விவரணச் சித்திரம்
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 'மன்னி' (ஆங்கிலச் சித்திரம்)
7-30 விவரணச் சித்திரம் (சிங்களம்)
8-00 செய்திகள் (சிங்களம்)
8-30 விவரணச் சித்திரம் (சிங்களம்)
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 சிங்கள நிகழ்ச்சி
9-40 'ஈவியோ பாட்ரா' திரைப்படம் (ஆங்கிலம்)
11-40 நிகழ்ச்சிகள் முடிவு.

# ஜே. ஆர்.—ரஜீவ் சந்திப்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி, ஜனதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்து உச்சி மகாநாட்டுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டதும் மகாநாட்டில் கலந்துகொள்ள ஜனதிபதி விருப்பம் தெரிவித்திருந்ததும்தெரிந்ததே.

### ரொமேஷ் பண்டாரி விளக்கினர்

நேற்றுக் காலை தாயகம் திரும்பிய திரு. ரொமேஷ் பண்டாரி, பிரதமர் திரு.ரஜீவ் காந்தியை நேற்றுப் பிற்பகல் சந்தித்து தமது இலங்கை விஜயத்தின்பலாபலன்களை எடுத்து விளக்கினர்.

இந்திய 'தூர்தர்ஷன்'செய்திகளின்படி திரு.ரொமேஷ் பண்டாரியின் கருத்துக்களை திரு. ரஜீவ் காந்தி மிகவும் அவதானமாகக் கேட்டறிந்தார் என்றும், இலங்கையில் திரு. பண்டாரி சந்தித்த தலைவர்களின் கருத்துக்களையும் அவர் அறிந்து கொண்டார் என்றும் தெரிய வந்தது.

### ஜனதிபதி நாளை புறப்பாடு

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நாளை சனிக்கிழமை இந்தியா புறப்படுகின்றார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஜே. ஆர்—ரஜீவ் உச்சி மகாநாடு நடைபெறும்.

திங்கட்கிழமை ஜனதிபதி ஜெயவர்த்தன தாயகம் திரும்புவார்.

### இலங்கை வலியுறுத்தும்

இச்சந்திப்பின்போது இலங்கை தெரிவிக்கவிருக்கும் யோசனைகள்—தீர்வுகள் மிகவும் இரகசியமாகவே இருக்கும் என்றுலும், வடபகுதி தீவிரவாதிகள் வன்செயலை உடன் நிறுத்தவேண்டும் என்று இந்தியாவை இலங்கை வலியுறுத்தும் என்று நம்பப்படுகிறது.

இந்தியா தனது முழுச்செல்வாக்கையும் பயன்படுத்தி, வன்செயலை ஒரு முடிவுக்குக் கொண்டுவர ஒத்துழைக்க வேண்டும் என்று இலங்கை கேட்டுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை முழு நாளும் இரு தலைவர்கள் மட்டுமே சந்தித்து உரையாடுவார்கள் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் கண்டறிவதில் மேற்படி சந்திப்பு நல்ல பலனை அளிக்கும் என்றே செய்திகள் தெரிவித்தன.

# OBITUARY

## ST. GEORGE - VICTOR

ST. GEORGE-VICTOR, Area Superintendant, JEDB, Pallai beloved husband of Ida, darling father of Rohan (Australia), Romanie (U K), Judy (U K), son of the late Mr. and Mrs Sam St. George, Atchuvely, loving brother of Anton (Autos), late Joseph, Dr. John (Australia), Dr. Charles (Zambia), Dr. Alfred (U K), son in-law of the late Mr Chrisostom and Mrs. Susan Chrisostom (Mannar), brother-in-law of Britto, Mabel, Millie, Fr. Joy (U. S A) and Percy, expired. Cortege leaving 19, Old Park Road, Jaffna on Saturday 1st June, 1985 at 7-30 a m. for interment at St. Mary's burial grounds. (3562)

# மரண அறிவித்தல்

## Mother Eustelle Hankenne

1920-ம் ஆண்டிலிருந்து இலங்கையில் மிஷனரியாகக் கடமையாற்றிய சகோதரி யூஸ்ரல் ஹன்கேன் (பெல்ஜியம்) தனது 93-வது வயதில் நேற்று முன்தினம் (29-5-85) இவ்வுலகை நீத்து இறையடி சேர்ந்தார். இவரின் நல்லடக்கம் இன்று (31 5 85 காலை 9 மணியளவில் இடம்பெறும் பூதவுடல் யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடச் சிற்றுலயத்திலிருந்து நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

அவர்களை அறிந்த சகலருக்கும் இதனை அறியத் தருகின்றேம். அன்னரின் ஆன்மா சாந்தியடைவதாக!

தகவல்: மாகாணத் தலைவி
Provincial

3558

## 40 வருடங்களுக்கு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டான். இதனையடுத்து இராணுவ அதிகாரி ஒருவர் வந்து அவனை எங்கள் முன்பாகவே சுட்டுக் கொன்றுர்.

இச்சம்பவத்தினை எப்படி சொல்வது என்று தெரியாமல் பதட்டத்துடன் அந்தப்பெண் காணப்பட்டார். தனது மூத்த மகன் அனுராதபுரத்தில் முஸ்லிம் கடைஒன்றில் வேலைசெய்தவர். அவருக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை என்றும் மிகவும் கவலையுடன் கூறினுர்.

# இப்படியும் நடக்கிறது

நிக்கவெரட்டியா பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது தொடர்பாக உரிமை கோரிய ஒரு இயக்கத்தின் செய்தி பத்திரிகையில் வெளிவந்தது கண்டு ஒரு கூட்டம் விமர்சனம் செய்து கொண்டிருந்தது.

அந்த நேரம் பார்த்து அங்கு வந்து கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் நிலைமையைப் புரிந்து கொண்டு ... ...

''... ... என்ன இருந்தாலும் எங்கட பொடியன்கள் அமெரிக்காவையும் விடல்ல ... அங்கும் வெற்றிகரமாக கைவைத்துத்தான் இருக்கிருர்கள்...'' என்று மகிழ்ச்சி கூறிவிட்டுச்சென்று விட்டார்.

குழுமியிருந்த கூட்டத்தினருக்கு பெரியவர் குறிப்பிட்ட அமெரிக்க விஷயம் உடனடியாகத் தெரியவில்லை. பல நிமிடங்கள் கழித்துத்தான் பெரியவரின் 'புதிர்' புரிந்தது.

அவர் நினைத்தது ... ... நிக்கராகுவா!

[இது ஒரு கடிதத் தகவல்]

★ ★

மஞ்சள் புரட்சி பற்றி இங்கு எழுதப்பட்டு ஒரு வாரமாகியும் சிலருக்குப் புதிர் விளங்கவில்லைபோல் தெரிகிறது

Gold is yellow. Yellow is gold. புரிகிறதா?

'ஊடுருவி'

## 'ஸ்கொட்ஸ்மன்'...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரிகை வெளிவருகின்றது.

பிரிட்டனில் இலங்கைத் தமிழர்களின் வருகைபெரும் நெருக்கடியான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது என்பதும் இந்நிலைமையைத் தவிர்க்க இவர்களில் பலரைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்பவும் பிரிட்டிஷ் அரசு தீர்மானித்துள்ளதும் தெரிந்ததே. இம்முடிவைக் கண்டித்தும், இலங்கைத் தமிழர்களுக்குப் பரிவுகாட்டியுமே 'ஸ்கொட்ஸ்மன்' பத்திரிகை மேற்கண்டவாறுகருத்து வெளியிட்டுள்ளது. அப்பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது:

''பிரிட்டன் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கியபோதிலும் அங்குள்ள தமிழர்களுக்குப் போதியளவு பாதுகாப்பு மற்றும் சம உரிமைகள் கிடைக்கவில்லை. இதன் காரணமாக கடந்த பல ஆண்டுகளாகஇலங்கையில் பெரும் இன்னல்களுக்குத்தமிழர்கள் உள்ளானுர்கள் இறுதியில் அவர்கள் தமது பாதுகாப்புத் தேடியே இங்கு பெருமளவில் அகதிகளாக வந்துள்ளனர். எனவே அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பைவழங்குவது பிரிட்டனின் பெரும் பொறுப்பாகும்'' என்று தெரிவித்துள்ளது.

### பல ஏடுகள் கண்டனம்

இதேவேளை கார்டியன் மற்றும் ஏனைய பிரிட்டிஷ் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு ஆதரவான செய்திகளையும், விமர்சனங்களையும் வெளியிட்டு வருகின்றன.

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பற்ற நிலைக்கு மீண்டும் தள்ளக்கூடாதென அவை பரவலாகக் கருத்துவெளியிட்டு வருகின்றன. (கி)

## உமாமகேஸ்வரன்-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய சந்தேக நபர்கள் கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர். ஆனல் உமாமகேஸ்வரன் நீதிமன்றில் ஆஜராக்கப்படவில்லை.

'5-ம், 6-ம், 7-ம், 8-ம், 10-ம் எதிரிகள் மரணமாகிவிட்டனர். ஏனைய மூன்று எதிரிகள் மட்டக்களப்புச் சிறை உடைப்பில் தப்பிச் சென்றுவிட்டனர்.

நீதிபதி சேனநாயக்கா; ''உமாமகேஸ்வரன் கைது செய்யப்படவில்லையா?

அரச சட்டத்தரணி: ''ஒரு போதும் கைது செய்யப்படவில்லை. நீதிமன்றம் ஆஜராக்கப்படவில்லை. வழக்குத் தொடுநர் சார்பில் அவர் கைது செய்யப்பட முடியாதவர் என்று தெரிவிக்கப்படலாம்'' என்றுர்.

இவ்வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (இ)

## வீதி திருத்த..,

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரி சந்தி வரை பிரதான வீதியில் உள்ள சிறு குழிகள் நிரப்பப்பட்டு தார் ஊற்றப்பட்டு வருகிறது. பெருந்தெருக்கள் திணைக்களம் இவ்வீதி வேலையை செய்து வருகிறது.

## தொடர்ந்து...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வீசப்பட்ட கல், அச்சாரதியின் முகத்தைக் கடுமையாகத் தாக்கிவிட்டதால் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் வேருெரு சாரதி மூலம் பஸ் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

நேற்றுக்காலை, கொழும்பு செல்லும் பிரயாணிகள் தொகை முன்னெப்போதுமில்லாத வகையில் யாழ். நகரில் அதிகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (மா)

## யாழ். நூலக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மங்கள விளக்கேற்றி வைத்தனர். 'மில்க் வைற்' அதிபர் திரு. கனகராசா நூல்களை அன்பளிப்புச்செய்தார் ஆணையாளர் திரு. சிவஞானம் மரமொன்றை நாட்டிவைத்தார்.

கலாஜாதி சனசமூக நிலையத்தினர் தேநீர் விருந்தளித்தனர், [க]

## அரியாலையில் —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெடியும் வெடிக்கவைக்கப்பட்டதாம்.

கடந்த ஏப்ரல் 29ம் திகதி அரியாலை - நெடுங்குளம் சந்தியில்இடம்பெற்ற ட்ரக் கண்ணிவெடிச்சம்பவத்தைத் தொடர்ந்து, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சிலர் மாண்டது தெரிந்ததே.

நேற்று மாலை இப்பகுதிக்கு மேல் ஹெலிகொப்டர் ஒன்றும் பல தடவை சுற்றி வட்டமிட்டு நிலைமைகளை அவதானித்தது.

## தொழிலதிபர் ..

[ ம் பக்கத் தொடர்ச்சி]

வைத்து விடுவிக்கப்பட்டார்.

தம்மைக் கடத்திச் சென்றவர்கள் கடந்த இரு வாரங்களாக அன்பாகவும் பண்பாகவும் கவனித்து வந்ததாகத் தெரிவித்த திரு. இராசரத்தினம், எதுவித நிபந்தனைகளுமின்றி தமது வீட்டில் கொண்டுவந்து சேர்த்தாகக் கூறினர்.

தமது விடுதலைக்குப் பகிரங்க வேண்டுகோள் விடுத்த சங்கங்களுக்கும், பிரார்த்தனை, உண்ணுவிரதம் மேற்கொண்டவர்களுக்கும். அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொழிலதிபர் நன்றி தெரிவித்தார். (மா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ... வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu PO; Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126